# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:- 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42-ஆம் விதி, 53-ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII-ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III-ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **S.C.No.117/2017** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :- | **அ.சா- 07 ( PW- 07 )** |
| **பெயர்** | :- | **குமரவடிவேல்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :- | |
| **ஊர்** | :- | |
| **வருவாய் வட்டம்** | :- | |
| **சமூகம் (சாதி)** | :- | |
| **தொழில்** | :- | |
| **மதம்/சமயம்** | :- | |
| **வயது** | :- | |

**2026-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள் 1969-ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் ரெட்டிப்பட்டியில் வசிக்கிறேன். நான் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறேன். என்னுடைய அலுவலகம் சேலம் ஐந்து சாலை சந்திப்பில் மெய்யனூர் முதன்மை சாலையில் உள்ளது. நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன இளமுருகனை எனக்குத் தெரியாது.

2014-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ஆம் நாளா அல்லது 24-ஆம் நாளா என்று எனக்கு நினைவில்லை. அன்று மாலை 05.30 மணிக்குமேல் நான் என் அலுவலகத்திற்கு வெளியில் தோட்டத்திற்கு நீர் ஊற்றிக்கொண்டு இருந்தேன். அலுவலகத்தின் உள்ளே கைப்பேசியை வைத்திருந்தேன். அழைப்பு வந்த சத்தம் கேட்டது. நான் உள்ளே சென்று பேசிக்கொண் டிருந்தேன். வெளியில் சத்தம் கேட்டது. நான் வெளியே வந்தேன். சிலர் ஓடினார்கள். ஒருவர் கீழே கிடந்தார். வெட்டுப்பட்டு காயங்களுடன் கிடந்தார். அவருடைய முதுகுதான் தெரிந்தது. முகம் தெரியவில்லை. அருகில் இருந்தவர்கள் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள். நான் பதற்றத்தில் வெளியே சென்று வீட்டிற்கு வந்துவிட்டேன். காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

இறந்துபோன இளமுருகனையும் எதிரிகள் பிரகாஷ், சுரேஷ்குமார், ரவிக்குமார் ஆகியோரை எனக்கு தெரியும் என்றால் தெரியாது. சம்பவதன்று நான் என் அலுவலகத்தில் இருந்தபோது இளமுருகன் அவருடைய இருச் சக்கர வாகனத்தில் வேகமாக சென்றவர் சிறிது நேரத்தில் அய்யோ அய்யோ

என்று சத்தம் போட்டுக்கொண்டு ஓடிவந்தார் என்றும் அவரை 04 அல்லது 05 நபர்கள் துரத்தி வந்து அரிவாளால் வெட்டினார்கள் என்றும் அப்போது அவர் கீழே விழுந்துவிட்டார் என்றும் எழுந்து Car பட்டறை பக்கம் ஓடினார் என்றும் ஏய் பிரகாஷ் அவனை விடாதீர்கள் வெட்டி சாயுங்கள் என்று சத்தம் வந்ததாகவும் ஓடிய இளமுருகனை தலை மற்றும் கழுத்து பகுதியில் அவர்கள் வெட்டினாரகள் என்றும் ஜென் Car பட்டறைமுன் நிலை தடுமாறி இளமுருகன் விழுந்தார் என்றும் வந்தவர்கள் இளமுருகனை கண்டபடி வெட்டினார்கள் என்றும் நான் கையில் வைத்திருந்த தண்ணீர் வாளியை அவர்கள்மீது தூக்கி எரிந்து சத்தம் போட்டேன் என்றும் அப்போது அவர்கள் கத்தியை காட்டி யாராவது அருகில் வந்தால் வெட்டிவிடுவோம் என்று சொல்லிவிட்டு இருச் சக்கர வாகனத்தில் ஏறி வேகமாக சென்றுவிட்டனர் என்றும் புலனாய்வின்போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.